

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 200 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 18 – வெள்ளிக்கிழமை 01 மார்ச் 2024 – கோவை ★ ★ 64 + 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 200 : Thiruvalluvar Year - 2055 - Maasi 18 - Friday 01 March 2024 - Kovai ★ ★ 64+12 Pages ₹ 5.00


## மார்ச் 2, 3, 4–ஆம் தேதிகளில் கழக அரசின் நிதிநிலை விளக்கம் மற்றும் “எல்லோர்க்கும் எல்லாம்”

# ‘திராவிட மாடல்’ நாயகரின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டங்கள்!

## தமிழ்நாடு முழுதும் மாநகரம், நகரங்களில் நடைபெறுகிறது! தலைமைக் கழகம் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 1 -**

**மார்ச் 2, 3 மற்றும் 4ஆம் தேதிகளில் தமிழ்நாடு முழுவதும் மாநகரம் மற்றும் நகரங்களில் “எல்லோருக்கும் எல்லாம்” “திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக் கூட்டங்கள்!” நடைபெறுகிறது என தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.**

தலைமைக் கழக அறிவிப்பு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 23.2.2024 அன்று காணொலி காட்சி வாயிலாக “தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் தொகுதி பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் “மார்ச் 1-ஆம் தேதியன்று நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 71-ஆம் அகவையில் அடியெடுத்து வைக்கிறார். ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலான பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரரான நம் தலைவர், கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிப் பொறுப்பில் அமரவைத்த பெருமையைப் பெற்றுத்தந்துள்ளார். தந்தை பெரியாரின் சமூக நீதியையும், பேரறிஞர் அண்ணாவின் மாநில சுயாட்சிக் கொள்கையையும், தமிழினத் தலைவர் கலைஞரின் சமூகநலத் திட்டங்களையும் மனதில் தாங்கி திராவிடமாடல் ஆட்சியை நடத்திக்கொண்டு இருக்கிறார் கழகத் தலைவர் அவர்கள்.

அத்தகைய பெருமைமிகு தலைவரின் பிறந்தநாளை நாம் அனைவரும் சீரியவகையில் கொண்டாடும் விதமாக திராவிடமாடல் அரசின் சாதனைகள் மற்றும் அரசின் நிதிநிலை அறிக்கை விளக்கும் பொதுக்கூட்டங்களை தமிழ்நாடு முழுவதும் மாநகராட்சி, நகராட்சிகளில் தலைமைக் கழக அறிவிப்பின்படி நடத்திடுவது” என நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி,

வருகிற மார்ச் 2, 3 மற்றும் 4ஆம் தேதிகளில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாநகரம் மற்றும் நகரங்களில் அறிவிக்கப்பட்டுள்ள பேச்சாளர்களைக் கொண்டு, “எல்லோருக்கும் எல்லாம்” “திராவிட மாடல் நாயகர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டங்கள்!” நடத்திட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.



**நாள்: 04.03.2024 (திங்கட்கிழமை)**

| | | |
|---|---|---|
| செங்கல்பட்டு நகரம் | - | **கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன்** |
| | | எஸ்.ஜெகத்ரட்சகன் |

**நாள்: 02.03.2024 (சனிக்கிழமை)**

| **இடம்** | **சிறப்புரை** |
|---|---|
| திருவெறும்பூர் | மாண்புமிகு இ. பெரியசாமி |
| திண்டுக்கல் மாநகரம் | முனைவர் க. பொன்முடி |
| கோபிச்செட்டிப்பாளையம் நகரம் | ஆ. ராசா |
| தஞ்சாவூர்மாநகரம் | கனிமொழி கருணாநிதி |
| நாமக்கல் நகரம் | திருச்சி சிவா |
| விருத்தாசலம் நகரம் | மாண்புமிக எ.வ.வேலு |
| நாகப்பட்டினம் நகரம் | மாண்புமிகு எ.வ. வேலு |
| நாகர்கோவில் மாநகரம் | மாண்புமிகு தங்கம் தென்னரசு |
| வேலூர் மாநகரம் | மாண்புமிகு அன்பில் மகேஸ் |
| | பொய்யாமொழி |
| பண்ருட்டி நகரம் | மாண்புமிகு கோவி. செழியன் |
| மதுரை மாநகரம் | தயாநிதி மாறன் |
| அதிராம்பட்டிணம் நகரம் | ஏ.கே.எஸ். விஜயன் |
| மறைமலை நகர் நகரம் | தமிழச்சி தங்கபாண்டியன் |
| வேதாரண்யம் நகரம் | மருத்துவர் எழிலன் நாகநாதன் |
| செய்யாறு நகரம் | சி.வி.எம்.பி. எழிலரசன் |
| இராணிப்பேட்டை நகரம் | இ.பரந்தாமன் |
| பேரணாம்பட்டு நகரம் | ஆ. கிருஷ்ணசாமி |
| மாங்காடு நகரம் | வாகை சந்திரசேகர் |
| எடப்பாடி நகரம் | திண்டுக்கல் ஐ. லியோனி |
| விக்கிரமசிங்கபுரம்நகரம் | நாஞ்சில் சம்பத் |
| இராமநாதபுரம் நகரம் | இயக்குநர் கரு.பழனியப்பன் |
| உளுந்தூர்பேட்டை நகரம் | சூர்யா வெற்றிகொண்டான் |
| ஒட்டன்சத்திரம் நகரம் | கம்பம் பெ.செல்வேந்திரன் |
| சேலம் மாநகரம் | சரத்பாலா |
| மானாமதுரை நகரம் | வரகூர் காமராஜ் |
| ஆற்காடு நகரம் | தஞ்சை கூத்தரசன் |
| குளித்தலை நகரம் | துரை.கி.சரவணன் |
| திருவண்ணாமலை நகரம் | தமிழன் பிரசன்னா |
| கொடைக்கானல் நகரம் | இரா. ராஜீவ்காந்தி |
| சுரண்டை நகரம் | குத்தாலம் அன்பழகன் |
| சிதம்பரம் நகரம் | குத்தாலம் பி. கல்யாணம் |
| திருமுருகன்பூண்டி நகரம் | ஆர். மகேந்திரன் |

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

---

## பதவி நாற்காலி காலியாகப் போகும் இறுதிக் கட்டத்தில் தமிழ்நாட்டுக்கு வந்து

# தி.மு.க.வுக்கு பிரதமர் மோடி சவால் விடுவதா?

## கடந்த கால அரசியல் வரலாற்றை மறந்து விடாதீர்! கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. எச்சரிக்கை!

**சென்னை, மார்ச் 1 -**

**“பதவி நாற்காலி காலியாகப் போகும் இறுதிக் கட்டத்தில் தமிழ்நாட்டுக்கு வந்து பிரதமர் மோடி தி.மு.க.வுக்கு சவால் விடுவதா?” என்று கழகப் பொருளாளரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களின் அறிக்கை வருமாறு:-

அரசுமுறைப் பயணமாகத் தமிழ்நாட்டுக்கு வந்து, அரசியல் பொதுக் கூட்டங்களில் கலந்துகொண்டு, தாம் பிரதமர் என்பதையே மறந்து, அரசியல் அவதூறுகளை அள்ளி இறைத்துவிட்டுப் போயிருக்கிறார் பிரதமர் நரேந்திரமோடி அவர்கள். அவரது உரையைப் பார்த்தபோது, அவரை நினைத்துப் பரிதாபமாக இருந்தது. பதவி நாற்காலி காலியாகப் போகும் இறுதிக் கட்டத்தில் தமிழ்நாட்டுக்கு வந்து அவர் முறுக்கி, முறுக்கி பேசத் தொடங்கி இருக்கிறார்.

தமிழ்நாட்டுக்கு இந்தப் பத்தாண்டு காலத்தில் செய்த சாதனைகளைப் பட்டியலிட்டிருந்தால் அவரைப் பாராட்டலாம். பத்தாண்டு காலத்தில் இந்திய நாட்டுக்குச் செய்து காட்டிய வளர்ச்சியைச் சொல்லி இருந்தால் வரவேற்கலாம். அப்படி எதுவும் இல்லாததால், திருப்பூர் கூட்டத்தில் ஜெயலலிதாவை வானளாவப் புகழ்ந்தும், திருநெல்வேலி கூட்டத்தில் தி.மு.க.வைக் கடுமையாக விமர்சித்தும் பேசிவிட்டுப் போயிருக்கிறார் பிரதமர்.

**பிரதமர் பேச்சு பொதுமக்கள் கிண்டல்!**

பா.ஜ.க. ஆட்சியைக் கவிழ்த்தவர் ஜெயலலிதா. ஊழல் வழக்கில் தண்டனை பெற்று இரண்டு முறை தமிழ்நாட்டின் முதலமைச்சர் பதவி பறிக்கப்பட்டவர் ஜெயலலிதா. நான்காண்டு சிறைத் தண்டனையும், 100 கோடி ரூபாய் அபராதமும் பெங்களூரு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டு பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டவர் ஜெயலலிதா. அப்படிப்பட்ட ஜெயலலிதா, தமிழ்நாட்டில் சிறப்பான ஆட்சியைக் கொடுத்ததாகப் பிரதமர் பேசியிருப்பதைப் பார்த்துத் தமிழ்நாட்டு மக்கள் சிரிக்கிறார்கள். மோடி நிலைமை இந்தளவுக்குப் போய்விட்டதே என்று கேலி செய்கிறார்கள். “பதவிக்காக எந்தளவுக்குத் தரைக்கு இறங்கிவிட்டார் பிரதமர்” என்று கிண்டல் அடிக்கிறார்கள்.

**பல்லடத்தில் பல்டி அடித்த மோடி!**

2016ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது, ஜெயலலிதா ஆட்சியைப் பற்றி, ’தமிழ்நாட்டில் லஞ்ச லாவண்யம் தலைவிரித்தாடுகிறது. இந்த லஞ்சத்தினால் தமிழ்நாடே முற்றிலும் பாதித்துப் போய் இருக்கிறது’ என ஒசூரில் நின்று கடுமையாக விமர்சித்த மோடிதான், இன்றைக்குப் பல்லடத்தில் பல்டி அடித்திருக்கிறார்.

2014ஆம் ஆண்டு தன்னை குஜராத் மாநிலத்தின் வளர்ச்சி நாயகனாகக் காட்டிக் கொண்ட நரேந்திரமோடி பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். அப்போது, தமிழ்நாட்டைவிட குஜராத் எந்த வகையில் வளர்ந்துவிட்டது என்று சொல்லி, ‘மோடியா? இந்த லேடியா?’ என்று கேட்டவர் ஜெயலலிதா.



அத்தகைய மோடி இன்று புகழ்வதைப் பார்த்து என்ன சொல்வது? ஜெயலலிதாவை வைத்து, தமிழ்நாட்டில் ஓட்டு வாங்க நினைக்கிறார் மோடி. அவரிடம் சொந்தச் சரக்கு ஏதுமில்லை என்பதற்கு இதுவே சான்று.

**மோடியின் கோபத்திற்கு இதுதான் காரணம்!**

தி.மு.க. அரசைக் கடுமையாக விமர்சித்திருக்கிறார் பிரதமர். தி.மு.க மீதும், அதன் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீதும் பிரதமருக்கு இவ்வளவு கோபம் ஏன் என்பது புரிந்து கொள்ள முடியாதது அல்ல. தனக்கு எதிரியே இல்லை என்ற இறுமாப்பில் இருந்த பா.ஜ.க.வுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் அனைத்தையும் இணைத்து ‘இந்தியா’ கூட்டணி அமைக்க அடித்தளம் அமைத்தவர் எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்பதுதான் பிரதமர் மோடியின் கோபத்துக்குக் காரணம்.

மோடி ஏதோ சாதித்து விட்டாராம், அவரது சாதனையைத் தமிழ்நாட்டில் தி.மு.க மறைக்கிறதாம். இப்படி புலம்பி இருக்கிறார் பிரதமர். அவர் எந்தப் பகுதியில் பேசினாரோ அந்தப் பகுதியின் தொழில் வளத்தையே சிதைத்தது ஒன்றிய பா.ஜ.க அரசுதான்.

பின்னலாடை வர்த்தகச் சந்தைக்கான வாசலை வங்கதேசத்துக்குத் திறந்துவிட்டு, திருப்பூரை வஞ்சித்த மோடி, கொங்கு மண்ணின் பெருமையை எப்படிப் பேச முடிகிறது? வங்கதேசத்துக்குப் பின்னலாடை மூலப் பொருட்கள் 60 விழுக்காடு இந்தியாவில் இருந்துதான் இறக்குமதி செய்யப்படுகின்றன. அங்கே உற்பத்தியாகும் துணி இந்தியாவிற்கே விற்கப்படுகிறது. வங்கதேச மண்ணுக்குச் சிவப்புக் கம்பளம் விரித்த மோடி அரசு, திருப்பூருக்குச் செய்தது அநீதிதானே! பின்னலாடை வர்த்தகத்தை நசுக்கிவிட்டு, ”தொழில்துறையில் கொங்கு மண் முக்கியப் பங்காற்றுகிறது” எனக் கூசாமல் பொய் சொல்கிறார்.

**இந்தியா முழுமைக்கும் தி.மு.க. திட்டங்கள்!**

“காங்கிரஸ் கூட்டணியில் தி.மு.க. அங்கம் வகித்தபோது தமிழ்நாட்டிற்கு ஒன்றும் செய்யவில்லை” எனப் பேசியிருக்கிறார் பிரதமர் மோடி. 2004 - மார்ச் 2013 வரை டாக்டர் மன்மோகன் சிங் ஆட்சியில் அங்கம் வகித்தபோது தமிழ்நாட்டிற்கு தி.மு.க கொண்டு வந்த திட்டங்கள் என்னென்ன? எனப் பிரதமர் தன்னிடம் இருக்கும் ஏஜென்சிகளிடம் கேட்டிருந்தால், சொல்லியிருப்பார்களே! சி.பி.ஐ, வருமானவரித் துறை, அமலாக்கத் துறை, என்.ஐ.ஏ., ஐ.பி என அதிகார அமைப்புகள் எல்லாம் பா.ஜ.க.வுக்குச் சேவை செய்யவே நேரம் போதவில்லையே!

**மோடிக்கு கூச்சமாக இல்லையா?**

தமிழ் செம்மொழி பிரகடனம், மிகப் பெரிய போக்குவரத்து மேம்பாலங்கள், சேலத்தில் புதிய இரயில்வே கோட்டம், தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம், சேலம் அரசினர் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவக் கல்லூரியாக மேம்பாடு, திருவாரூரில் மத்தியப் பல்கலைக் கழகம், சென்னையில் கடல்சார் தேசிய பல்கலைக்கழகம், இந்தியாவிலேயே முதல் முறையாக வளர்ந்த நாடுகளுக்கு இணையான 3ஜி தகவல் தொழில்நுட்பத் திட்டம் 50 காசு செலவில் இந்தியா முழுவதும் தொலைபேசியில் பேசும் வசதி என ஒன்பதாண்டு காலத்தில் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியா முழுமைக்கும் பல திட்டங்களைத் தி.மு.க கொண்டு வந்தது.

இத்தகைய சிறப்புத் திட்டம் ஏதாவது தமிழ்நாட்டுக்கு பா.ஜ.க அரசு கொண்டு வந்ததாகப் பட்டியல் போட முடியுமா? ஒரே ஒரு எய்ம்ஸ் மருத்துவமனை 2015ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. 2019ஆம் ஆண்டு பிரதமர் மோடியால் ஒரு செங்கல் வைக்கப்பட்டது. மறு செங்கல் இதுவரை வைக்கப்படவில்லை. 2024 மே மாதத்துக்குப் பிறகு பதவியேற்கும் புதிய பிரதமர்தான் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையைக் கட்டப் போகிறார். வீட்டில் இருந்தபடி மோடி அதனைப் பார்க்கப் போகிறார். மதுரையில் ஒரே ஒரு எய்ம்ஸ் கூட திறக்க முடியாத உங்களால் மதுரைக்கு எப்படி வர முடிகிறது? கூச்சமாக இல்லையா?

**கூச்சமே இன்றி மோடி வருகை!**

பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ஒரு பைசாவைக்கூடத் தமிழ்நாட்டிற்குத் தரவில்லை. வெள்ளம் பாதித்த தூத்துக்குடிக்கும் திருநெல்வேலிக்கும் வெறும் கையோடு வந்து முழும் போடுகிறார்கள். வெள்ளம் பாதித்த பகுதியை மேம்படுத்த 37 ஆயிரம் கோடி நிதி கேட்டோம். அதில் கொஞ்சம் கூட தரவில்லை. தர மறுத்த நீங்கள் அது பற்றிய கூச்சமே இல்லாமல் தூத்துக்குடிக்கும் திருநெல்வேலிக்கும் எப்படி வருகிறீர்கள்?

தமிழ்நாடு கொடுக்கும் ஒரு ரூபாய்க்கு வெறும் 29 பைசா மட்டுமே வழங்குகிறது ஒன்றிய அரசு. ’29 பைசா மோடி’ தமிழ்நாட்டுக்குக் கொடுத்தது என்ன? சில திருக்குறள்களும் பாரதியார் கவிதைகளும் மட்டும்தானே!

நெல்லையில் ‘அல்வா’வை நினைவூட்டி இருக்கிறீர்கள். பேரிடர் நிதியைக் கூட தராமல் ’அல்வா’ கொடுக்கும் மோடி ஆட்சிக்கு இந்தத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் நிச்சயம் ‘அல்வா’ கொடுப்பார்கள்.

இந்தியாவின் முன்னேற்றத்தைப் பேசுவதைவிட, ‘இந்தியா’ கூட்டணியின் முன்னேற்றத்தைக் கண்டு தாங்க முடியாமல் மணிக்கொரு முறை இந்தியா கூட்டணிக் கட்சிகளையும் அதன் தலைவர்களையும் விமர்சித்துக் கொண்டிருக்கிறார்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்